


30.06.2024

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் அரசியலமைப்பு சட்டம், ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கைக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் நன்றி தெரிவித்துள்ளார்.

2. இராணுவ தலைமை தளபதியாக லெப்டினன்ட் ஜென்ரல் உபேந்திர திவேதி புதுதில்லியில் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

3. புதிய குற்றவியல் சட்டங்கள் நாளை அமலுக்கு வருகின்றன.

4. நீலகிரி மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் இன்று ஆய்வுசெய்தார்.

5. சென்னையில் நடைபெறும் தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான முதலாவது மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□□

மன் கி பாத்

நாட்டின் அரசியலமைப்பு சட்டம் மற்றும் ஜனநாயகத்தின் மீது மக்கள் தங்களுடைய அசைக்க முடியாத நம்பிக்கையை மீண்டும் நிரூபித்துள்ளதற்கு தமது நன்றியை தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

3-வது முறையாக பிரதமராக பதவியேற்றபின், அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் இன்று முதல்முறையாக உரையாற்றிய அவர், 65 கோடி மக்கள் வாக்களித்த நிலையில், நடந்து முடிந்த மக்களவை தேர்தல் உலகின் மிகப்பெரிய தேர்தலாக கருதப்படுவதாக கூறினார்.

வெளிப்படையான தேர்தல் நடவடிக்கைகளை உறுதிசெய்த தேர்தல் ஆணையம் உட்பட அனைவருக்கும் தமது பாராட்டுக்களை பிரதமர் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் மக்களுடன் மீண்டும் தொடர்பு கொண்டதற்கு மகிழ்ச்சி வெளியிட்ட பிரதமர், இந்தியாவின் வளமான கலாச்சாரத்துடன் கூடிய வளர்ந்த

இந்தியாவை உருவாக்குவதற்கான முயற்சிகள் இந்நிகழ்ச்சியின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

சர்வதேச சுற்றுசூழல் தினத்தை முன்னிட்டு உலகளாவிய மரம் வளர்க்கும் இயக்கம் தொடங்கப் பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர், நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் அன்னையின் பெயரில் மரம் நடவேண்டும் என்றும், அது தொடர்பான புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தார்.

அம்ரித் மஹோத்சவ் இயக்கத்தின் மூலம் நாட்டின் வனப்பரப்பு கடந்த 10 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் பழங்குடியின மக்களின் உற்பத்தி பொருட்களுக்கான முக்கியத்துவம் அதிகரித்து வருவதாக கூறிய பிரதமர், சுற்றுச்சூழல் மற்றும் ஆரோக்கியத்திற்கு உகந்த இப்பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றார்.

துர்க்மெனிஸ்தானில் குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் சிலை திறக்கப்பட்டதை சுட்டிக்காட்டிய பிரதமர், உலகளவில் இந்திய கலாச்சாரம் மற்றும் கலைஞர்களின் புகழ் பரவி வருவதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

10-வது சர்வதேச யோகா தினம் உலகம் முழுவதும் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டதாக எடுத்துரைத்த பிரதமர், மார்ஷல் தீவுகளின் அதிபர், பூட்டான் பிரதமர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் யோகா பயிற்சியை மேற்கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தியதாக கூறினார்.

நைல் நதிக்கரை, செங்கடல், பிரம்மீடுகள் முன்பாகவும், லட்சக்கணக்கான மக்கள் யோகபயிற்சி மேற்கொண்டதாகவும்,

எகிப்தில் இந்நாளையொட்டி புகைப்பட போட்டிகள் நடத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் டேபிள் டென்னிஸ், மல்யுத்தம், குதிரை சவாரி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் விளையாட இந்திய வீரர்கள் தகுதி பெற்றுள்ளதாக குறிப்பிட்ட பிரதமர், இவர்களின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன், இன்றைய மனதின் குரல் நிகழ்ச்சியில் மரம் நடுவதன் அவசியம் குறித்த பிரதமரின் வேண்டுகோளை ஏற்று அனைவரும் தங்கள்

அன்னையின் பெயரில் மரம் வளர்த்து சுற்றுசூழல் மேம்பாட்டை உறுதிசெய்ய வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

□□□□□□□□

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இன்று கத்தாருக்கு அரசுமுறை பயணம் மேற்கொள்கிறார்

அந்நாட்டு பிரதமர் ஷேக் முகமது பின் அப்துல் ரஹ்மானுடன் இருதரப்பு உறவுகள், வர்த்தகம், முதலீடு எரிசக்தி, பாதுகாப்பு, கலாச்சாரம், மக்கள் தொடர்பு, பரஸ்பர நலன் மற்றும் சர்வதேச பிராந்திய விஷயங்களில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.

அடுத்த 20 ஆண்டுகளுக்கான இயற்கை எரிவாயு இறக்குமதிக்கான 78 பில்லியன் டாலர் ஒப்பந்தத்தில் இருநாடுகளும் அண்மையில் கையெழுத்திட்டுள்ள நிலையில் வெளியுறத்துறை அமைச்சரின் இந்த பயணம் முக்கியத்துவம் பெறுகிறது.

□□□□□□□□

உபேந்திர திவேதி

இராணுவ தலைமை தளபதியாக லெப்டினன்ட் ஜென்ரல் உபேந்திர திவேதி புதுதில்லியில் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இராணுவத்தின் 46-வது துணை தளபதியாக பதவி வகித்த உபேந்திர திவேதி, கடந்த 40 ஆண்டுகளாக பல்வேறு தலைமை பொறுப்புகளை வகித்துள்ளார்

இராணுவத்தின் உயரிய பரம் விசிஷ்ட சேவா, அதிவிசிஷ்ட சேவா உள்ளிட்ட பதக்கங்களை இவர் பெற்றுள்ளார்.

முன்னதாக இப்பதவி வகித்த மனோஜ் பாண்டேவின் பதவிக்காலம் இன்றுடன் நிறைவடைந்ததை அடுத்து உபேந்திர திவேதி பதவியேற்றுக் கொண்டார்.

□□□□□□□□

குற்றவியல் சட்டங்கள்

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா, பாரதிய சாக்ஷ்யா அதிநியம் ஆகிய 3 புதிய குற்றவியல் சட்டங்கள் நாளை அமலுக்கு வருகின்றன.

குற்றவியல் சட்ட நிர்வாகத்தில் இந்தியாவின் வளர்ச்சிப்பாதை என்ற தலைப்பிலான கருத்தரங்கம் மும்பையில் இன்று நடைபெறுகிறது.

புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடைபெறும் இந்த கருத்தரங்கில், பல்வேறு மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள், வழக்கறிஞர்கள், சட்ட வல்லுநர்கள், மாணாக்கர், புலனாய்வு அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

□□□□□□□□

கா.ராமச்சந்திரன்

நீலகிரி மாவட்டம் கூடலூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட இடங்களை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் இன்று நேரில் ஆய்வுசெய்தார்.

கூடலூர், பந்தலூர் உள்ளிட்ட இடங்களில் கடந்த 4 தினங்களாக பெய்துவரும் கனமழையால் பல்வேறு இடங்களில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களை நேரில் சந்தித்த அமைச்சர் நிவாரண பொருட்களையும் வழங்கினார்

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

□□□□□□□□

நெல்லை வாய்ஸ்

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் மழைக் காரணமாக 143 அடி கொள்ளளவு கொண்ட நெல்லை மாவட்டம் பாபநாசம் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

□□□□□□□□

பேச்சிப்பாறை

கன்னியாகுமரியில் தொடர்மழை காரணமாக பேச்சிப்பாறை அணையிலிருந்து 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப் பட்டதையடுத்து கோதையாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக பாதுகாப்பு கருதி திற்பரப்பு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை நீடிப்பததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

□□□□□□□□

வானிலை

இதனிடையே மேற்குதிசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் அடுத்த சிலமணி நேரத்தில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

□□□□□□□□

கபினி அணை

கர்நாடக மாநிலம் காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் மழை நீடிப்பதால் கபினி கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து உபரிநீர் காவிரியில் திறந்து விடப்படுகிறது.

தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் தற்போது வினாடிக்கு ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

□□□□□□□□

குறுவை சாகுபடி

குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக தமிழக அரசின் முதன்மை செயலர் செல்வி அபூர்வா தலைமையில் திருச்சியில் இன்று ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரதீப்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் தஞ்சை, மயிலாடுதுறை, திருவாரூர், நாகை, கடலூர், அரியலூர் ஆகிய 7 மாவட்டங்களைச் சேர்ந்த வேளாண் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

□□□□□□□□

தே.ஜ.யு. சோதனை

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் இன்று சோதனை மேற்கொண்டுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட சிமி அமைப்பின் உறுப்பினராகவும், கோவை குண்டுவெடிப்பு வழக்கில் குற்றவாளியாக கருதப்படும் தஞ்சையை சேர்ந்த அப்துல்காதரிடம் தே.ஜ.யு. அதிகாரிகள் திருச்சியில் இன்று விசாரணை மேற்கொண்டனர்.

இதேபோல் தஞ்சை, புதுக்கோட்டை, ஈரோடு உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட இடங்களில் அதிகாலையிலிருந்தே ஜே.ஜே.யு. சோதனை நடைபெற்று வருகிறது.

□□□□□□□□

இருவரி

கள்ளக்குறிச்சி மாவட்டம் மட்டிகை, புத்தநந்தல் உள்ளிட்ட கிராமங்களில் 2 கோடி ரூபாய் மதிப்பில் நீர்நிலைகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதாக ஆட்சித்தலைவர் திரு. பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

நீர்வழித் தடங்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு அதிகாரிகள் கண்காணிக்குமாறு அவர் கூறினார்.

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் நடைபெற்ற 3-ம் கட்ட அகழாய்வில், 3 ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த சுடுமண்ணால் செய்யப்பட்ட அணிகலன்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

அரியலூர் மாவட்டத்தில் சகி ஒருங்கிணைந்த சேவை மையத்தில் காலியாகவுள்ள வழக்குபணியாளர், பாதுகாவலர் பணியிடங்களுக்கு வரும் 12-ம் தேதிக்குள் தகுதியுடைய மகளிர் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி ஆனிமேரி ஸ்வர்ணா தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பு கல்விக்கடன் முகாம்கள் மூலம் இதுவரை 8 கோடியே 25 லட்சரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆலத்தூர், தெரணி ஊராட்சி ஒன்றியங்களில் இன்று நடைபெற்ற கலைஞரின் கனவு இல்லத் திட்டம் குறித்த சிறப்பு கிராமசபை கூட்டத்தில் ஆட்சித்தலைவர் திருமதி. கற்பகம் பங்கேற்றார்.

□□□□□□□□

மகளிர் டெஸ்ட் கிரிக்கெட்

சென்னையில் நடைபெறும் தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான முதலாவது மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

3-ம் நாளான இன்று குழடடழற ழெ செய்துவரும் தென்னாப்பிரிக்கா 1 விக்கெட் இழப்பிற்கு 105 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக முதல் இன்னிங்சில் இந்தியா 6 விக்கெட் இழப்பிற்கு 603 ரன் எடுத்து டிக்ளேர் செய்தது.

தொடர்ந்து விளையாடிய தென்னாப்பிரிக்கா 266 ரன்னுக்கு ஆட்டமிழந்த நிலையில் தற்போது தனது இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்து விளையாடி வருகிறது.

□□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.